

மும்பையில் தமிழ்நாடு கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பனால் வெளியிடப்பட்ட கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா சிறப்பு மலரையும் கலைஞர் நூற்றாண்டு நினைவுப் பரிசையும் மகாராஷ்டிர ஆளுனர் சி.பி.ராதாகிருஷ்ணன் அவர்களிடம் கலைஞர் தமிழ்ச் சங்கம் நிர்வாகிகள் தலைவர் ம.சேசுராசு, செயலாளர் ஜேம்ஸ் தேவதாசன், பொருளாளர் க.மு.மாணிக்கம், புரவலர் அன்பழகன் பொற்கோ ஆகியோர் வழங்கினார்கள். நிர்வாகக்குழு உறுப்பினர் இரா.காந்தி, மாநகர வி.சி.க. அமைப்பாளர் சாலமோன்ராசா உடன் இருந்தார்கள்.

### கழகத் தலைவர் முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு

# திருவொற்றியூர் மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் 100 படகுகள் பங்குபெறும் மாபெரும் படகுப்போட்டி!

### எஸ்.சுதர்சன் எம். எல்.ஏ, கலாநிதிவீராசாமி எம் பி, கே.பி. சங்கர் எம்.எல்.ஏ, பங்கேற்பு! வை.ம.அருள்தாசன் ஏற்பாடு!

சென்னை,மார்ச்.7-

சென்னை வடகிழக்கு திருவொற்றியூர் மேற்கு பகுதி திமுக சார்பில் கழகத் தலைவர் தமிழ்நாடு முத லமைச்சர் திராவிட பேரரசர் பிறந்தநாளை முன்னிட்டு மாவட்ட கழக செயலாளர் மாதாவரம் எஸ். சுதர்சன் எம்.எல். ஏ தலைமையில் திருவொற்றியூர் மேற்கு பகுதி கழக செயலாளர் வழக்கறி ஞர் வை.ம.அருள்தாசன் ஏற்பாட்டில் 08.03.2025 சனிக்கிழமை மற்றும் 09-03-2025 ஞாயிற்று கிழமை பகல் 1:00 மணியளவில் பாரதியார்நகர் கடற்கரை - சகாய மாதா பள்ளி அருகில் நடைபெறுகிறது.

மக்கள் போற்றும் மாபெரும் தலைவர்களின் தலைவர் அனைவருக்குமான முதல்வர் கழகத் தலைவர் 72 வது பிறந்தநாளில் திருவொற்றியூர் மேற்கு பகுதி திமுக சார்பில் பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம. அருள்தாசன் ஏற்பாட்டில் நடைபெறும் தொடர் நிகழ்வாக மாபெரும் இயந்திர படகு போட்டியில் நடைபெறுகிறது. மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ அவர்கள் தலைமையேற்று மாபெரும் படகு போட்டியை துவக்கி வைக்கிறார்.

மருத்துவர் கலாநிதி வீராசாமி எம் பி மற்றும் திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே பி சங்கர் எம்எல்ஏ

திருவொற்றியூர் தொகுதி பார்வையாளர் ஆரம்பாக்கம்

கே. ஆறுமுகம் கிழக்கு பகுதி கழக செயலாளர் தி.மு தனியரசு எம்.சி சிறப்பு அழைப்பாளர்களாக பங்கேற்று போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்குகிறார்கள். 100-கும் மேற்பட்ட இயந்திர படகு பங்கு பெறும் போட்டி முதல் சுற்று 08-03-25 அன்று மதியம் 1:00 மணியளவில் தூங்குகிறது. இரண்டாம் சுற்று அதில் வெற்றி பெற்று இறுதி போட்டிக்கு தகுதி பெரும் போட்டியாளர்கள் 09-03-25 அன்று நடைபெறும் இறுதிப் போட்டியில் ப ங்கேற்று வெற்றி பெரும் முதல் போட்டியாளருக்கு ரொக்க பரிசு 50000/- வழங்கப்படும். இரண்டாவதாக வெற்றி பெறுவோருக்கு ரொக்க பரிசு 30000/- வழங்கப்படும் மூன்றாவதாக வெற்றி பெறுவோருக்கு ரொக்க பரிசு 15000/- வழங்கப்படும். வட்ட கழக செயலாளர் கே.பி.சொக்கலிங்கம் எம். சி, எஸ். டி. சங்கர் மாவட்ட அயலக அணி தலைவர் வை. சின்னையன் பகுதிகழகப் பிரதிநிதி கே.செந்தில்குமார் பகுதி கழகப் பிரதிநிதி ஆகியோர் வரவேற்பில்.

மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார், சன் முனியா ண்டி விளையாட்டு மேம்பா ட்டு அணி அமைப்பாளர், வை. ம. கண்ணதாசன் மாவட்ட விளையாட்டு அணி துணை அமைப்பாளர் வழக்க றிஞர் அணி ஜி.ஹரிஹரன் கே.சரவணன் எம். பாபு வி.ராமையா ஆகியோர் முன்னிலையில் பகுதி கழக நிர்வாகிகள் ந.திருசங்கு இ.குமரவேல் யு.எஸ். குறளரசன் ஏ இந்துமதி, எம் வஜ்ரவேல் வட்டக் கழக செயலாளர்கள் மு.சிவகுமார் எம்சி டி.சேகர் எக்ஸ் எம் சி மு. மாணிக்கவேலன் பி.தமிழரசன்( எ) தம்பியா எம் சி, கே. பவுல், கி.கண்ணன் எக்ஸ்.எம். சி, மாவட்ட பிரதிநிதிகள் ஆர். தினேஷ்குமார், எம் சந்திரகுமார், ந.ராம்குமார், ஜி. தினேஷ், ஆர். மோக னசுந்தரம் முருகா ஆறுமுகம், வி.வீரமுத்து, பொன். கோ. விஜயன் எஸ். ஆர். மலைராஜ் எஸ். கணேஷ் எஸ். மகேந்தி ரன், இ.வி. சரவணன் பங்கே ற்பில். மாவட்ட மீனவர் அணி தலைவர் ஆர்.நவக்குமார் மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர்கள் தழவை எஸ். ரஞ்சித் டி. சக்கரவர்த்தி பகுதி பிரதிநிதி எம் கார்த்திக் டி. ஞானசேகர் ஆகியோர் ஒருங்கிணைப்பில் நடைபெறும் படகுப்பட்டிக்கு மாநில மாவட்ட பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலா ளர், மாமன்ற உறுப்பி னர்கள், மாவட்ட பிரதிநிதிக ள், சார்பு அணிகளின் நிர்வாகி கள், கழக மூத்த முன்னோ டிகள், பாக முகவர்கள், கழக உடன்பிறப்புகள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொ ள்கிறேன்.

நன்றியுரை ஆர்.நரேன் குமார்.

### ஏ.எம்.வி. பிரபாகரராஜா - க.தனசேகரன் - கே.கண்ணன் பங்கேற்பு

# மாநகர போக்குவரத்து கழகம் கலைஞர் நகர் பணிமனையில் மோர் - தண்ணீர் பந்தல் திறப்பு விழா!

### 137 ‘ஆ’ வட்டக் கழக செயலாளர் அ.கதிரேசன் அறிவிப்பு!

சென்னை, மார்ச் 7 -

சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அண்ணன் மா.சுப்பிரமணியம் அவர்களின் ஆலோசனைப்படி

மாநகர போக்குவரத்து கழகம் கலைஞர் நகர் பணிமனையில் மோர் தண்ணீர் பந்தல் தர்பூசணி இளநீர் வழங்கும் விழா 07.03.2025 பகல் 12 மணியளவில்

இந்நிகழ்ச்சியில் விரும்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ எம் வி . பிரபாகராஜா,

சென்னை மாநகராட்சி கணக்கு மற்றும் தணிக்கை குழு தலைவர் க.தனசேகரன், கலைஞர் நகர் தெற்கு பகுதி கழக செயலாளர் கே.கண்ணன் தலைமை பொதுக்குழு றுப்பினர்கள் உ.துரைராஜ்,பி.எஸ்.முருகேசன்,எஸ் டி தங்கராஜ் மாவட்டத்துணை செயலாளர் வாசுகிப்பண்டியன் வட்ட கழக செயலாளர்கள் ஜம்பு முருகன் ,செந்தில் குமார் ,ராஜ் செழியன் ,பூக்கடை பழனிச்சாமி ,பி கே குமார், சதிஷ் கண்ணன்

மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள் பகுதி கழக நிர்வாகிகள் வட்டக் கழக நிர்வாகிகள் கலந்துகொல்கின்றனர் இந்நிகழ்ச்சியில் மாநகர போக்குவரத்து கழக ஊழியர் முன்னேற்ற சங்க நிர்வாகிகள் தொழிலாள நண்பர்கள் திரளாக

கலந்துகொள்ளுமாறு பணிமனை செயலாளரும் 137வது ஆ வட்ட கழக செய லாளருமான அ.கதிரேசன் கேட்டுக்கொண்டுள்ளார்.

### கர்நாடக மாநில தி.மு.க. இலக்கிய அணி சார்பில்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழா!

பெங்களூர், மார்ச் 7 -

கர்நாடக மாநில தி.மு.க. இலக்கிய அணி சார்பில் முதலமைச்சர், தி.மு.க. தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் 72-வது பிறந்தநாள் விழா பெங்களூரில் விமரிசையாக கொண்டாடப்படுகிறது.

23-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பெங்களூர் அலசூர் ஏரிக்கரை அருகே உள்ளே பெங்களூர் தமிழ் சங்க அரங்கத்தில் இந்த விழா நடைபெறுகிறது.

கர்நாடக மாநில தி.மு.க. பொதுக்குழு உறுப்பினர் இரா. அன்பு தமிழ் தாய் வாழ்த்து பாடி வரவேற்புரை ஆற்றுகிறார். கர்நாடக மாநில தி.மு.க. இலக்கிய அணி, தலைவர் முருகு தர்மலிங்கம் தலைமை தாங்குகிறார். பேராசிரியர் வணங்காமுடி, கழக முன்னோடி வி.எஸ். மணி, இளைஞர் அணி துணை அமைப்பாளர் இராஜசேகரன், முருகா னந்தம், விகாஷ் ஆ.கரிகாலன், பிரபு திருமதி சற்குணா இளமதி, காயத்திரி பிரபு ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

கர்நாடக மாநில தி.மு.க. அமைப்பாளர் ந. ராமசாமி முன்னிலை வகிக்கிறார். மாநில நிர்வாகிகள், இலக்கிய அணி நிர்வாகிகள், இளைஞர் அணி நிர்வாகிகள், மகளிர் அணி நிர்வாகிகள், தொ.மு.ச. நிர்வாகிகள், முன்னாள் இந்நாள் பொறுப்புக்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், கழக முன்னோடிகள், கலைஞரின் உடன்பிறப்புகள், கழக தோழர்கள் கலந்து கொள்கின்றனர்.

மருத்துவர். ஜெய.ராஜமூர்த்தி (இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள், சென்னை) கவிச்சுடர் கவிதைப்பித்தன், அரிமா டாக்டர் நா. சந்திரபாபு (தலைமை இலக்கிய அணி, பொருளாளர்) ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

திருமதி. தங்கவயல், ஆ.கரிகால வளவன் விழா நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்குகிறார். முருகமணி செல்வம் நன்றி உரை ஆற்றுகிறார்.

விழாவில் கருத்தரங்கம் நடைபெறுகிறது. முத்து மணி நன்னன் தலைமை தாங்குகிறார். அண்ணா வழியில் அயராதுழைப் போம் என்ற தலைப்பில் ந.இராமசாமி அமைப்பாளர், கர்நாடக மாநில தி.மு.க. உரையாற்றுகிறார். சமுதாயம் ஆதிக்க மற்ற அமைத்ததே தீருவோம் என்ற தலைப்பில் தங்கவயல் ஸ்ரீதர் கர்நாடக மாநில தி.மு.க. உரையாற்றுகிறார்.

இந்தி திணிப்பை என்றும் எதிர்ப்போம் என்ற தலைப்பில் தங்கவயல் கரிகாலன் உரையாற்றுகிறார். மாநில சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி என்ற தலைப்பில் கிரி துணை அமைப்பாளர், கலை இலக்கிய பேரவை உரையாற்றுகிறார்.

வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வோம் என்ற தலைப்பில் தங்கவயல்.எ.வி.மதியழகன் உரையாற்றுகிறார்.

நாட்யாஞ்சலி நிருத்தியா லயா நாட்டியக் குழுவினரின் திராவிடம் வளர்த்த திராவிட இயக்க பாடல்கள் அமைப்பு : திருமதி. சுப்புலக்குமி குழுவினர்.

இந்த விழாவிற்கான ஏற்பாடுகள் மற்றும் ஒருங்கிணைப்பாளராக கர்நாடக மாநில தி.மு.க. கழக இலக்கிய அணி செயலாளர் போர் முரசு கதிரவன் மேற்கொண்டு வருகிறார்.



முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் எழும்பூர் தொகுதி, வார்டு எண்.77, புளியந்தோப்பு, குருசாமி நகர் பிரதான சாலையில் 2.9 கி.மீ. தொலைவிற்கு 6 இஞ்ச் விட்டம் கொண்ட கழிவு நீர்க் குழாய்களை 10 இஞ்ச் விட்டம் கொண்ட கழிவுநீர்க் குழாய்களாக மாற்றியமைக்கும் பணியினைக் கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் பார்வையிட்டார்.




சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி தி.மு.க. சார்பில் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 1000 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் மீனாகுமாரி வசந்தா ஆகியோருக்கு தையல் இயந்திரத்தை 1வது மண்டலக்குழு தலைவரும் பகுதிக் கழகச் செயலாளருமான தி.மு.தனியரசு ஏற்பாட்டில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்டக் கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமை வகித்திட டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., கே.பி.சங்கர் எம்.எல்.ஏ., மாவட்ட அவைத் தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன், ஆரம்பாக்கம் கே.ஆறுமுகம் வை.ம.அருள்தாசன் மற்றும் கழக முன்னணியினர், நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### முதல்வர் பிறந்த நாள் விழா! கம்பராஜபுரம் கே.எம்.ஆர்.க.குமணன் வரவேற்பு - இ.அசோகன் தலைமை!

# காஞ்சிபுரம் தெற்கு ஒன்றியம் சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம்!

### க.சுந்தர் எம்.எல்.ஏ. – க.செல்வம் எம்.பி.– சிவாஜி கிருஷ்ணமூர்த்தி சிறப்புரை!

காஞ்சிபுரம்,மார்ச்,7

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், காஞ்சிபுரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் திரவிட மாடல் நாயகர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மாபெரும் பொதுகூட்டம் மற்றும் கைபந்து விளையாட்டு போட்டி மற்றும் பரிசளிப்பு விழா 08.03.2025 சனிக்கிழமை, அன்று மாலை 5.00 மணி கீழ்பேரநல்லூர் ஊராட்சியில் நடைபெறுகிறது

ஒன்றிய செயலாளர் கம்பராஜபுரம் கே.எம்.ஆர்.க.குமணன் வரவேற்று பேசுகிறார். மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் இ. அசோகன் தலைமை வகிக்கிறார்.

த.கன்னியப்பன், டி.எல். தயாளன், ந.வீரராகவன், முனியம்மாள், ராஜகோபால்

கோ.கமலக்கண்ணன்,ஏ. கே.பரசுராமன்,தொ.தட்சிணாமூர்த்தி,வே.திருநாவுக்கரசு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இவ் விழாவில் விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கி மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம். எல்.ஏ.சிறப்புரை யாற்றுகிறார்.

மேலும் சிறுவேடல் க.செல்வம் எம்.பி., தலைமைக் கழகப் பேச்சாளர் சிவாஜி கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் பேசுகின்றனர். இதில் வசந்தி அசோகன், தே.வீராசாமி, ரா.மோகன், கே.தயாளன், அனுபமா நவீன், பூவில்வன், திவ்யபிரியாஇளமது, டி.அசோக்குமார், எம் குமார், எஸ்.நந்தகுமார், தி.நடராஜன், ப.உதயகதிரவன், கோ.ராஜா, மா.சீனிவாசன், ரா.விக்னேஷ், வீ.சவீன், வெ.கீதா, க.வனிதா, ஆர். சகுந்தலா, ஆர்.தமிழ்செல்வி, செ.இந்திரா, ஜெ.அனிதா, சுசிலா ராவணன், லட்சுமிசம்பத், ஆ.தினகரன்,, பார்வதி ஏழுமலை, கே.குப்புசாமி, சன்.தேவராசன், சரஸ்வதி, வசந்தி அசோகன், சி.என். ஜெயமண, ஆ. கோதண்டராமன் ,வனிதா கெங்கன், கு.புண்ணியக்கோட்டி,

வ.பூபதி, ராஜேஸ்வரி கன்னியப்பன், விஜயசுந்தரம், தி.அன்பழகன், பா.தேவ பாலன், சங்கரி குமார், ராதா விஜயகுமார், உமாமகேஸ்வரி, குமார், நளினிடில்லி பாபு, கலைச்செல்வி, சம்பத் ,கீதாராணி சங்கர், சித்ரா பாபு, செல்வி ராசிமற்றும்பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர். அ.சோழன் நன்றி கூறுகிறார்.

### டாக்டர் ஜி.சந்திரபோஸ் தலைமை! வை.ம.அருள்தாசன் - கவி கணேசன் முன்னிலை! எஸ்.பொன்னிவளவன் - என்.ஜெய்சங்கர் வரவேற்புரை!

# திருவொற்றியூர் சார்பு நீதிமன்றத்தில் கழகத் தலைவர் பிறந்தநாள் விழா!

### மாதவரம் எஸ்.சுதர்சனம் - கே.பி.சங்கர் - தி.மு.தனியரசு - வழக்கறிஞர்கள் பங்கேற்றனர்!

சென்னை, மார்ச். 7 -

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72 வது பிறந்த நாளையொட்டி, தி.மு.க. சட்டத்துறை மற்றும் திருவொற்றியூர் சார்பு நீதிமன்ற தி.மு.க. வழக்கறிஞர்கள் சார்பில் நீதிமன் றத்தில் 250 நபர்களுக்கு அறுசுவை உணவு மற்றும் வழக்கறிஞர்களுக்கு சட்டப் புத்தகங்கள் வழங்கல் நிகழ்ச்சி கழக சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி, சென்னை வடகிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. ஆகியோர் ஆலோசனைப்படி, அரசு வழக்கறிஞர் எஸ்.பொன்னிவளவன் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு கழக சட்டத்துறை துணைச் செயலாளர் டாக்டர் ஜி.சந்திரபோஸ் தலைமை தாங்கினார்.

தலைமை கழக வழக்கறிஞர் கவி கணேசன், திருவொற்றியூர் மேற்கு பகுதிக் கழகச் செயலாளர் வழக்கறிஞர் வை.ம.அருள்தாசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேலும் அரசு வழக்கறிஞர்கள் என்.ஜெய்சங்கர் மற்றும் எஸ்.பொன்னிவளவன் வரவேற்புரை ஆற்றினர்.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக சென்னை வடகிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் மாதவரம் எஸ். சுதர்சனம், திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர், திருவொற்றியூர் கிழக்கு பகுதிக் கழகச் செயலாளர், சென்னை, 1 வது மண்டலக்குழுத் தலைவர் தி.மு. தனியரசு ஆகியோர் கலந்து கொண்டு 250 நபர்களுக்கு அறுசுவை உணவு (பிரியாணி) வழங்கினர்.

மேலும் சென்னை வடகிழக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் கே.லஷ்மிகாந்தன், மாவட்ட நிர்வாகிகள் ஷோபனா, பாலமுருகன், மாவட்டப் பிரதிநிதி வழக்கறிஞர் பொன்.கோ.விஜயன் பங்கேற்று கேக் வெட்டி, இனிப்பு வழங்கி, பிரியாணி மற்றும் இளம் வழக்கறிஞர்களுக்கு சட்டப் புத்தகங்கள் வழங்கி சிறப்பித்தார்கள்.

நிகழ்ச்சியின் தொடக்கமாக கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாட்டின் நலன்களையும், எதிர்காலத்தையும், யாருக்காகவும், எதற்காகவும்விட்டுத்தரமாட்டோம் தமிழ் நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுப்பட்டு போராடுவோம் தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் என்கிற உறுதிமொழியை அனைவர்களின் முன்னிலையில் கழக சட்டத்துறை துணைச் செயலாளர் டாக்டர் ஜி.சந்திரபோஸ் வாசிக்க வழக்கறிஞர்கள் அனைவரும் அதனை உரக்கச் சொல்லி உறுதிமொழி ஏற்று கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் வட்டச் செயலாளர் வழக்கறிஞர் எஸ்.தமிழ்செல்வன், பாஸ்கர், போக்குவரத்து அரசு வழக்கறிஞர் இ.மகேஷ் , எஸ்.சக்திவேல், சி.தன்ராஜ், கே.ஆர்.எஸ்.செந்தில் ராஜா, மணலி மகேந்திரன், என்.சரவணன், ஜி.ஹரிகுமார், எஸ்.தரணி, நரேந்தர குமார், பிரவீன், மணிகண்டன், ஆசான் சரவணன், சாகுல் அமீத், தாங்கல் சரவணன், ஆர்.ராஜலஷ்மி, விஜயலஷ்மி, சாருமதி, உமாமகேஸ்வரி, எம். மகேந்திரன், மோகன்குமார், எம்.தினகரன், எம். மரியாசேகர், கார்த்திகேயன், இளங்கோ, முகிலரசன் கண்ணன் மற்றும் 200 க்கு மேற்பட்ட வழக்கறிஞர்கள் பங்கேற்று சிறப்பி த்தனர்.

இறுதியாக இந்நிகழ்ச்சி ஏற்பாடு செய்த எஸ். பொன்னிவளவன்

நன்றியுரை கூறினார்.

### கழகத் தலைவர் வேண்டுகோளுக்கிணங்க.

# பொது மக்களை கோடைக் கால வெப்பத்திலிருந்து காக்கும் வகையில், தி.மு.க. சார்பில், திருவள்ளூர் மத்திய மாவட்டம் முழுவதும் “தண்ணீர் நீர்மோர் பந்தல்” அமைக்க வேண்டும்!

### மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அறிவிப்பு



தமிழ்நாடு முதலமைச்சர். கழகத் தலைவர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க. தமிழகத்தில் பெரும்பாலான மாவட்டங்களில் கோடைக்கால வெப்பம் அதிகரிக்கத் தொடங்கி, மார்ச் மாத துவக்கத்திலேயே வெப்பம் அதிகரித்துள்ள நிலையில் தமிழக மக்களை இக்கோடைக்கால வெப்பத்திலிருந்து காக்கும் வகையில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், தண்ணீர் பந்தல் அமைக்க வேண்டும் அறிவிப்புக்கிணங்க

திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட மாநகர, ஒன்றிய நகர, பகுதி, பேரூர், செயலாளர்கள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் வார்டு கழக செயலாளர்கள் கிளைக் கழகச் செயலாளர்கள் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மக்கள் அதிகம் கூடும் இடங்களான தெருமுனைச்சந்திப்புகளிலும் சாலை மற்றும் தெருக்கள் ஓரமாகவும், போக்குவரத்து மற்றும் பொதுமக்கள் யாருக்கும் எவ்வித இடையூறு இல்லாமல் “தண்ணீர் பந்தல்” அமைத்து, பொதுமக்களின் தாகம் தீர்த்திட தண்ணீர் பந்தல் அமைத்து அதில் குடிநீர், நீர்மோர், இளநீர், குளிர்பானம், தர்பூசணி போன்ற கோடை வெப்பத்தை தணிக்கும் பொருட்களை பொது மக்களுக்கு வழங்கி, அவர்களின் தாகத்தை தணிக்க வேண்டுமெனவும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்

**அமைச்சர் ஆவடி சா.மு.நாசர்**
செயலாளர் திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக



பல்லாவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பொழிச்சலூர் பகுதியில் உள்ள புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் தேசிய ஊரக வளர்ச்சி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூபாய் 75 லட்சம் மதிப்பீட்டில் 6 வகுப்பறைகள் கொண்ட புதிய கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ கலந்துகொண்டு புதிய வகுப்பறை கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டிபணிகளை துவக்கி வைத்தார். உடன் ஊராட்சி மன்ற தலைவர் வனஜா தயாளன், துணை தலைவர் ஜோசப், செல்வராஜ், ராஜா, செயற்பொறியாளர் சங்கர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.